*2022 ஏப்ரல் 18]* [திரு. V. செந்தில்பாலாஜி]

*பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட மின் பராமரிப்புப் பணிகளுக்கு மின்சாரம் நிறுத்தப்படுவதைத் தவிர்த்து, தமிழ்நாட்டில் இதுவரை மின்வெட்டு இல்லை. எந்தக்காலத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழ்நாட்டில் மின்வெட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இங்கு அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், 2,500 மெகா வாட் மின்சாரம் நமக்கு கூடுதலாகத் தேவை. 3,000 மெகா வாட் அளவில் கொள்முதல் செய்வதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மின்சார வாரியம் எடுத்திருக்கிறது. மின்சார வாரியம் சீரான மின்சாரம் வழங்கி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 5. கவன ஈர்ப்பு

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II-ல் அனைத்து பேரூராட்சிகளையும் இணைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II-ல் அனைத்து பேரூராட்சிகளையும் சேர்க்க வேண்டியது குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையில் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## அறிக்கை

அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2007–2008 முதல் 2010–2011 வரை பேரூராட்சிகளில் செயல்பட்டு வந்தது. தற்போது அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II பேரூராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. குடிநீர், சாலை வசதி, சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடவும், பராமரித்திடவும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் அனைத்து பேரூராட்சிகளிலும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.450 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.449.73 கோடியில் சாலைகள், வடிகால் மற்றும் கல்வெர்ட், விபத்து தடுப்பணை, நவீன எரிவாயு தகனமேடை, அறிவுசார் மையம், மார்கெட் மற்றும் சந்தைகள், பேருந்து நிலையப் பணிகள், சமுதாயக்கூட பணிகள், மின்கலம்மூலம் இயங்கும் வாகனம், இலகுரக வாகனம், புலம்/நீர்நிலைப் பணிகள், பூங்கா மேம்பாடு ஆகிய 798 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 180 பணிகள் முடிவுற்று, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

*பிற்பகல் 12–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை ஒன்றினைத் தந்திருக்கிறார்கள். நல்ல அறிக்கையாகத்தான் இருக்கின்றது. ஆனால், டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஏழையெளிய மக்களுக்கு, கிராமவாசிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் திட்டம். அதே திட்டத்தை நீங்கள் இப்போது கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் என்று கொண்டுவந்திருக்கிறீர்கள். வரவேற்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்று முழுமையான திட்டமாக நிச்சயமாக அமைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்று ஒன்றிய அரசு பல திட்டங்களைத் தந்திருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது)

2022 ஏப்ரல் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் அனைத்துத் திட்டங்களும் கிராமப் பஞ்சாயத்துகளுக்குத்தான் செல்கின்றன. பேரூராட்சிகளுக்கு திட்டங்களை அமல்படுத்துவதில்லை. Jal Jeevan திட்டத்தை ஒன்றிய அரசு தந்திருக்கின்றது. தண்ணீர்ப் பஞ்சத்தை அனைத்துப் பகுதிகளிலும் தீர்ப்பதற்கு பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், வருமானம் மிகவும் குறைவாக உள்ள பேரூராட்சிகள் மற்றும் இரண்டு, மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கக்கூடிய பேரூராட்சிகளில் பணமே இல்லை. அங்கு சரியான கட்டுமானப் பணிகளைச் செய்வதற்கு வசதிகள் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதனை நிவர்த்தி செய்வதற்கு, புதிய திட்டங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். முன்பு package system இருந்தது. Package system-ல் ரூ.10 இலட்சத்திற்கு மேல் திட்டம் போடப்பட்டது. தற்போது package system இல்லை. தற்போது ஒரு இலட்சம், இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் என்று சதா நம்முடைய தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு . . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு கேள்வி இருக்கின்றது. இன்னொரு கேள்வி வரும். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு எடுத்துக்காட்டியதைப்போல 2010–2011 ஆம் ஆண்டு வரை பேரூராட்சிகளுக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இருந்தது. 2011 ஆம் ஆண்டுக்குப் பிறகு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இல்லை. அதனால்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த முறை ஆட்சிக்கு வந்தபோது, புதிதாக உருவாக்கப்பட்ட பேரூராட்சிகளினுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு, சிறப்பு நிதியாக ரூ.1,000 கோடி ஒதுக்கித்தந்து, அதில் நகராட்சிகளுக்கு ரூ.550 கோடியும், பேரூராட்சிகளுக்கு ரூ.450 கோடியும் தந்து, தற்போது கிட்டத்தட்ட 16 வகையான பணிகள் எடுக்கப்பட்டு, நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ரூ.450 கோடியில் ரூ.449 கோடியே 73 இலட்சத்திற்கு அரசாணை வெளியிடப்பட்டு

பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேபோல் இந்த ஆண்டும் தொடர்ந்து இந்தப் பணிகளை பேரூராட்சிகளில் நிறைவேற்றுவதற்காக ரூ.450 கோடியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் நிதி இல்லாத பேரூராட்சிகள் இருந்தன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இன்றைக்கு சொந்தமாகவே நிதியை உருவாக்கிக்கொள்வதற்காகத்தான் சில வழிமுறைகள் எல்லாம் செய்து தரப்பட்டிருக்கின்றன. எனவே, எந்தப் பகுதியில் பணிகள் நடைபெறவில்லை என்றாலும் எந்தப் பகுதிக்கு என்ன திட்டம் தேவையென்றாலும், எடுத்துரைத்தால் அதனைச் செய்து தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாகச் செய்து தருவீர்கள். அதேபோல், இன்றைக்கு கிராமப் பஞ்சாயத்துகளைப்போல் நகரப் பஞ்சாயத்துகள் இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், பல பிரச்சினைகள் இருக்கின்றன. விலைவாசி உயர்வினால் கட்டுமானப் பணிகளைச் செய்வதற்கான வாய்ப்புகள் இல்லை. அதிகமான பணிகளைச் செய்ய முடியாது. தற்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு என்று ரூ.3 கோடி தந்திருக்கிறீர்கள். அதனை வைத்து எவ்வளவு பணிகளைச் செய்ய முடியும் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் ரூ.2 கோடியினை கலைஞர் மேம்பாட்டுத் திட்டத்தில் தந்தீர்கள் என்று சொன்னால் இன்னும் அதிகமான அடிப்படை வசதிகளுக்கான செலவுகளை நகரப் பஞ்சாயத்துகளில் செய்ய முடியும் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதனைச் செய்து தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று கோடி ரூபாய் சட்டமன்ற உறுப்பினர்*

*2022 ஏப்ரல் 18]* [திரு. கே.என். நேரு]

*தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வெறும் 80 இலட்சம் ரூபாய் அளவில்தான். . .(குறுக்கீடு) என்னைப் பாருங்கள். கேள்வி கேட்டுவிட்டு நீங்கள் இருவரும் அங்கு பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, அந்த மாவட்டத்தில் பேரூராட்சிகள் அதிகம். அதனால் அவர் கேட்டுள்ளார். அந்த மாவட்டத்தில் மட்டும். . . .*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு என்று ரூ.3 கோடி ஒதுக்கப்படுகிறது. அதில் கடந்த காலத்தில் ரூ.3 கோடிக்கு எப்படி செலவு செய்ய வேண்டும் என்று அரசாணை வெளியிட்டு, எந்தெந்தப் பணிகளுக்கு செலவு செய்யப்பட வேண்டும் என்று இருந்தது. தற்போது நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த மூன்று கோடியில் இரண்டு கோடியே இருபது இலட்சம் ரூபாய் சட்டமன்ற உறுப்பினர் . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இரண்டு கோடியே பத்து இலட்சம் ரூபாய் (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். பிறகு நாம் கேட்டுக்கொள்ளலாம். நேரம் தற்போது இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது உறுப்பினர்கள் ரூபாய் இரண்டு கோடியே பத்து இலட்சத்திற்கு என்ன திட்டம் வேண்டுமானாலும் பேரூராட்சியில் எடுத்துக்கொள்ளலாம். எனவே, அந்த இரண்டு கோடியே பத்து இலட்சம் ரூபாய் போக மீதமுள்ளதை குடிதண்ணீர் பிரச்சினையாக இருந்தாலும், சாலைப் பிரச்சினையாக இருந்தாலும் தேவைப்பட்ட இடத்தில் சிறப்பு நிதியாக ஒதுக்கித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 12–35*

## 6. அறிக்கை அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை*